முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1432

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.08.2023**, வியாழக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அறமாக வாழுகின்ற தேசிகா
மாறுதலை உலகில் புரிவேன் என
மாதர்மத்தை கையில் எடுத்த அரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 14ம் நாள், 31.08.2023 வியாழக்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தில் உலக மக்கள் வந்தால் போதும்
3. தரணியே மாற்றங்காணக் கூடும்
தன்னார்வ தொண்டு என்கின்ற தர்ம தொண்டு உலகமெல்லாம் பரவி
பரவியே தர்மபலத்தோடு இந்த பேருலகம்
பாதுகாப்பான ஞான ஆட்சிதனை பெறும்
4. மாட்சிமைபட அரங்கன் தர்மத்தோடு
மக்களை ஒன்றிணைக்கின்ற சன்மார்க்க நெறிவழி
வகைபட தயவாக உலகோர் வர
வணங்கி அரங்கன் திருவடி பற்ற
5. நேயமுடன் ஆறுமுகப்பெருமான் என் ஆசி
நிலவுலகில் யாவர்க்கும் கிட்டி இனிதே
உலகமெல்லாம் ஞானிகள் ஆட்சி
ஓங்காரன் என்னாசியோடு ஞான ஆட்சியாக
6. பெருமைமிக்க அரங்கன் சீடர்களால்
பேராற்றல்மிக்க அரங்கன் தொண்டர்படை மூலமாகவும்
இந்த உலகம் மாற்றம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–